# திருவாரூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
(15.06.2016 முதல் 19.06.2016 வரை)

தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை– 612 101

போன்: 0435 2472098 E-mail: dirtrri@tnau.ac.in Fax: 0435 2472881


=======================================================================

தேதி:14.06.16

## கடந்த 4 நாட்களில் நிலவிய வானிலை (10.06.2016– 13.06.2016)

| காரணிகள் | கடந்த நாட்களில் வானிலை |
|---|---|
| மழை (மி.மீ.) | 3.0 |
| அதிகபட்ச வெப்பநிலை (°C) | 35 – 37 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (°C) | 28 – 30 |
| மேகமூட்டம் (ஆக்டா) | 5 |
| காற்றின் ஈரப்பதம் (%) | 54 – 70 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 5 – 6 |

## அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு

| காரணிகள் | எதிர்பார்க்கப்படும் வானிலை | | | | |
|---|---|---|---|---|---|
| | நாள் 1 15.06.2016 | நாள் 2 16.06.2016 | நாள் 3 17.06.2016 | நாள் 4 18.06.2016 | நாள் 5 19.06.2016 |
| மழை (மி.மீ.) | 2 | 2 | 0 | 0 | 0 |
| அதிகபட்ச வெப்பநிலை (°C) | 38 | 38 | 38 | 38 | 38 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (°C) | 30 | 30 | 30 | 30 | 30 |
| மேகமூட்டம் (ஆக்டா) | 4 | 4 | 4 | 4 | 4 |
| காற்றின் ஈரப்பதம் (%) | 54 – 63 | 54 – 63 | 54 – 63 | 54 – 63 | 54 – 63 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 6 | 6 | 6 | 6 | 6 |
| காற்றின் திசை | வடமேற்கு | வடமேற்கு | வடமேற்கு | வடமேற்கு | வடமேற்கு |

15.06.2016 முதல் 19.06.2016 வரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். எதிர்பாக்கப்படும் மழை அளவு 2 மி.மீ.

***வேளாண் அறிவுரைகள் :***

**பயிர் : நெல், உளுந்து, எள், கரும்பு மற்றும் பருத்தி**

**நெல் தரிசு பருத்தி: பூக்கும் பருவம். நெல் : நாற்றங்கால் தயார்செய்தல்**

- திருந்திய நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள், இரண்டரை சென்ட் நிலத்தில் மேட்டு பாய் நாற்றங்காலில் 5 கிலோ இரண்டாம் கொம்பு நெல் விதையை சீராக தூவி நாற்று விடவும். முதல் ஐந்து நாள் வரை பூவாளி உதவியுடன் நாற்றங்கால் நன்கு நனையும்படி காலை அல்லது மாலை வேளைகளில் தண்ணீர் தெளிக்கவும். ஆறாம் நாளிலிருந்து பாய் நாற்றங்காலைச் சுற்றியுள்ள வாய்க்காலில் நாற்றுப்படுகை நன்கு நனையும்படி தண்ணீரை பாய்ச்ச வேண்டும். நாற்று விட்ட ஒன்பதாம் நாள் மாலை வேளையில் 0.5 சத யூரியா கரைசலை தெளிக்கவும். நாற்று பறிப்பதற்கு இரண்டு நாள் முன்பாக தண்ணீர் பாய்ச்சுவதை நிறுத்த வேண்டும். நாற்றுவிட்ட 14ஆம்நாள் நாற்றுகள் நடவிற்கு தயார் ஆகிவிடும்.
- குறுவை பருவத்திற்கு நாற்றங்கால் தயார் செய்யும் போது ஒரு எக்டருக்கான 20 சென்ட் நாற்றங்காலில் ஒரு டன் தொழு உரம் அல்லது கம்போஸ்ட் இடவேண்டும். கடைசி உழவின் போது நாற்றங்காலுக்கு 40 கிலோ டிஏபி உரம் அடியுரமாக இடவேண்டும். களிமண் நிலத்திற்கு 4 கிலோ ஜிப்சமும், ஒரு கிலோ டி.ஏ.பி. ஒரு சென்ட் நாற்றங்காலுக்கு என்ற அளவில் விதைத்த 10 ஆம் நாள் இடவேண்டும். இது வேர் அறுபடாமல் நாற்றுக்களை பறிக்க உதவும்.
- நாற்றங்காலில் இலைப்பேன் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த குளோரிபைரிபாஸ் (2.5 மிலி/லி) தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

**இயக்குநர்**